முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1450

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**18.09.2023**, திங்கட்கிழமை

1. கலியுக ஞானியே அரங்கா
   கலியிடர் வெல்ல வந்த ஞானதேசிகா
   அழியாமை தந்து உலகோரை மீட்க
   அற்புதம் நடத்தி வரும் குருராஜா
2. அரசனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
   (*சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் முதல் நாள், 18.09.2023, திங்கட்கிழமை*)
   வரமென அரங்கன் திருவடி பற்றி
   வையகத்தார் ஞானம் பயின்றால்
3. திருவருள் கிட்டி இந்த உலகினிலே
   தெய்வநெறி கண்டு பிறவாபேறு
   பேறுதனை கண்டு இலகுவாய் உலகோர் அடைவர்
   பிரணவக் குடில் தொடர்பு கூட்டிவர
4. சரணவச்சுடரேற்றி வணங்கி வர
   சற்குரு அரங்கன் திருவடி பற்ற
   பற்றவே உலகோர்க்கு ஞான சித்தி
   பரோபகார உயர் ஞான சித்தி கூடி
5. ஆற்றல்பட இனிபிறவா பெரும்பேறு
   அரங்கன் ஞானத்தால் அடையநேரும்
   நேர்மைகொண்டு அரங்கன் அன்னதான
   நிலவுலக சன்மார்க்க சுத்தநெறி
6. பெருமைபட ஏற்று தொடர்ந்து வந்தால்
   பிசகின்றி தர்மத்தை செய்துவந்தால்
   வந்தாலே உலகோர்க்கு ஞானியாகும்
   வல்லமையான உயர்வாய்ப்பு கலியினிலே

7. சிந்தைபட ஆறுமுகன் என்னருளால்
சிறப்பாகக் கிட்டி உலகோர் சிறக்கநேரும்
நேர்மைபட அரங்கனோடு கலியுக மக்கள்
நிதானமாய் தொடருகின்ற தர்மத்தை

8. பெருமைகொண்டு தொடர்ந்து செய்து வந்தால்
பிசகின்றி அற்புதத்தை காண நேரும்
காணவே அரங்கனோடு கந்தவேலன் யான்
கருணைகொண்டு இணைந்து சேவையாற்ற

9. ஞானம் கருதி உலகோர் வருவர்
வரவேண்டி நன்மைபட பிரணவக் குடிலே
சிறந்த சித்தி தரும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–